செ.வெ.எண்-19 நாள்-10.09.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிறித்தவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்வதற்காக தமிழக அரசால் நபர் ஒருவருக்கு ரூ.20,000/- நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் பயணம் மேற்கொண்டு பயன்பெற விரும்பும் கிறித்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்புனித பயணம் பெத்லஹேம், ஜெருசலேம், நாசரேத், ஜோர்டான் நதி, கலிலேயா சமுத்திரம், மற்றும் கிறித்தவ மதத் தொடர்புடைய பிற புனிதத் தலங்களையும் உள்ளடக்கியது. இப்புனித பயணம் செப்டம்பர் 2019 முதல் மார்ச் 2020 வரை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயணகாலம் 10 நாட்கள் வரை இருக்கும். இதற்கான விண்ணப்ப படிவங்கள் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கட்டணமின்றி பெறலாம். இதற்கான நிபந்தனைகள், விதிமுறைகள் மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியன www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதள முகவரியில் காணலாம். விண்ணப்பங்களை படியிறக்கம் செய்தும் பயன்படுத்தலாம்.

இதற்கான கால வரம்பு **30.09.2019** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே புனிதப் பயணம் செல்ல விருப்பமுள்ள பயனாளிகள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் உரிய இணைப்புகளுடன் அஞ்சல் உறையில் **"கிறித்தவர்களின் ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி கோரும் விண்ணப்பம் 2019-20"** என்று குறிப்பிட்டு **ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமகால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை-600 005** என்ற முகவரிக்கு **30.09.2019-க்குள்** கிடைக்கும் வகையில் அனுப்பப்பட வேண்டும்(நேரில் வரவேண்டியதில்லை). மேலும் விவரங்களுக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் / சிறுபான்மையினர் இயக்குநரகம், தொலைபேசி எண்.044-28520033-த்திலும் தொடர்புகொள்ளலாம்.

மேற்படி திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து அரியலூர் மாவட்ட கிறித்தவர் இன மக்களை பயன்பெறும்படி அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**